# මුදල් අමාත්‍යාංශය
# நிதி அமைச்சு
# MINISTRY OF FINANCE

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව.
செயலகம், கொழும்பு 01. இலங்கை
The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office: (94)-11-2484500, (94)-11-2484600, (94)-11-2484700
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: (94)-11-2449823
වෙබ් අඩවිය / வெப் சைட் / Website: www.treasury.gov.lk


මගේ අංකය / எனது இல. / My No.: மு/6/1/1/2015
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2015.05. 15

சுற்றறிக்கை இல: மு.அ. 01 / 2015 /01

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் மாவட்ட செயலாளர்கள், ஆணைக் குழுக்களின் தலைவர்கள்,
உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள்,
அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சடடமுறைச் சபைகளின் தலைவர்கள்,
இலங்கை மத்திய வங்கி உட்பட அனைத்து அரச வங்கிகளின் தலைவர்கள்,
பல்கலைக்கழக துணைவேந்தர்கள், உயர் கல்வி நிறுவனங்களின் தலைவர்கள்,
அரச கம்பனிகளின் தலைவர்கள் அனைவருக்கும்.

**<u>உத்தியோக வெளிநாட்டு பயணங்களுக்காக செலாவணி விடுவித்தல் மற்றும் அவை சார்ந்த செலவினங்கள்</u>**

பேச்சுவார்த்தைகள், கருத்தரங்குகள், பயிற்சித் திட்டங்கள் உட்பட்டதாக அனைத்து உத்தியோக நடவடிக்கைகளுக்கு வெளிநாடு செல்லும் உத்தியோகத்தர்களுக்குச் செலுத்த வேண்டிய கொடுப்பனவுகள் சம்பந்தமான ஏற்பாடுகள் உட்சேர்க்கப்பட்டு இந்த சுற்றறிக்கை அறிவுரைகள் வெளியிடப்படுகின்றன.

02. **பொது விடயங்கள்**

(அ) வெளிநாட்டுப் பயணக் கொடுப்பனவுகள் மற்றும் அவை சார்ந்த செலவினங்களைப் பெற்றுக் கொள்வதற்காக தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக முறைப்படி உத்தியோக விடுமுறை அனுமதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) வெளிநாட்டு உதவிகள் மீது நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்கள் / நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் வெளிநாடு செல்வதாயின் அதற்கு உரித்துடைய உடன்படிக்கை / ஆவணங்களில் அதற்கான ஒதுக்கீடுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(இ) இலங்கை மக்கள் குடியரசைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உத்தியோக தூதுக் குழுவினருக்கு உட்சேர்க்கப்பட வேண்டியதானது அந்த விடயத்துக்குத் தேவையான ஆகக் குறைந்த எண்ணிக்கை மட்டுமேயாகும்.

(ஈ) இந்தச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவுகள் லெுத்தப்படுவதானது உரித்துடைய நபர் நம்பகமான முறையில் அந்தப் பணத்தை செலவு செய்வார் எனும் தீர்மானத்தை முன்வைத்தேயாகும். ஆகையால் உரிமை கிடைக்காத கொடுப்பனவொன்று கிடைத்திருப்பின் கொடுப்பனவு பெறுபவரினால் அதனை மீளச் செலுத்துதல் வேண்டும்.

**03. அமைய கொடுப்பனவுகள் செலுத்துதல்**

(அ) கல்வி, பயிற்சி, பேச்சுவார்த்தை, கருத்தரங்குகள் போன்ற உத்தியோகத்தரொருவரின் தகைமைகள், அறிவு மற்றும் திறமை அபிவிருத்திக்கு உரித்துடைய நிகழ்ச்சித் திட்டங்களுக்கு வெளிநாடு செல்லும் போது அமைய கொடுப்பனவுகள் செலுத்துதல்.

இவ்வாறான நிகழ்ச்சித் திட்டங்களுக்கு உத்தியோகத்தரொருவர் வெளிநாடு செல்லும் போது, வெளிநாட்டு அரசாங்கம் அல்லது மானியம் வழங்கும் நிறுவனத்தினால் வெளிநாட்டில் உறப்படும் போக்குவரத்து செலவுகள், விமான நிலையக் கட்டணம் போன்ற அமைய செலவினங்களை மீள்நிரப்புவதற்காக அமைய கொடுப்பனவாக ஏதேனும் பணம் செலுத்தப்படாதவிடத்து நாளொன்றுக்கு 40 ஐ.அ.டொலர் வீதம் உச்சமாக 30 நாட்களுக்கு அமைய கொடுப்பனவு செலுத்த முடியும்.

(ஆ) உத்தியோக தூது விடயமொன்றுக்கு அல்லது நாட்டில் நிறைவேற்ற முடியாத நிறுவனத்தின் விடயப் பரப்புக்கு உரித்துடைய உத்தியோக விடயமொன்று அல்லது விடயங்களுக்கு அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தி வெளிநாடு செல்லும் போது அமைய கொடுப்பனவுகள் செலுத்துதல்.

இந்த உத்தியோக நடவடிக்கைகளுக்காக சமுகமளிக்கும் போது வெளிநாட்டில் உறப்படும் போக்குவரத்துச் செலவினம், விமான நிலையக் கட்டணம் போன்றவற்றைத் தீர்வு செய்வதற்காக அமையக் கொடுப்பனவாக ஏதேனும் பணத் தொகையொன்று வெளிநாட்டு அரசாங்கம் அல்லது மானியம் வழங்கும் நிறுவனத்தினால் செலுத்தப்படாதவிடத்து நாளொன்றுக்கு 75 ஐ.அ.டொலர் வீதம் உச்சமாக 15 நாட்களுக்கு அமைய கொடுப்பனவு செலுத்த முடியும்.

**04. இணைந்த கொடுப்பனவு செலுத்துதல்.**

**(அ)** மேலே (3) (அ) மற்றும் (ஆ) சந்தர்ப்பங்களில் தங்குமிடம் அல்லது உணவு பானங்களுக்கான செலவினங்கள் வெளிநாட்டு அரசாங்கம் அல்லது மானியம் வழங்கும் நிறுவனத்தினால் உறப்படாதவிடத்து மட்டும் கீழே அட்டவணையில் உள்ளவாறு இணைந்த கொடுப்பனவுகள் செலுத்த முடியம்.

இணைந்த கொடுப்பனவு – 24 மணித்தியால முழுமையான நாளொன்றுக்கு ஐக்கிய அமெரிக்க டொலர்களினால்

| நாடுகள் தொகுதி இலக்கம் (அட்டவணை இலக்கம் 01 – பிரகாரம்) | முதலாம் தரம் ஐ.அ.டொலர் | இரண்டாம் தரம் ஐ.அ.டொலர் |
|---|---|---|
| 1 | 200 | 170 |
| 2 | 260 | 230 |
| 3 | 330 | 280 |
| 4 | 400 | 340 |
| 5 | 530 | 420 |

(1) மேலே அட்டவணையில் முதலாம் தரத்திற்கு உரித்துடையதானது

(i) அமைச்சர்கள், மாகாண ஆளுநர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை அமைச்சர்கள் மற்றும் தலைவர்கள், மாநகர சபை முதல்வர்கள் மற்றும் நகர சபை மற்றும் பிரதேச சபை தலைவர்கள்.

(ii) அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 6-2006 இன் பிரகாரம் ஆரம்ப மாதாந்த சம்பளம் ரூபா 36,755/- அல்லது அதற்கு மேற்பட்ட சம்பள அளவுக்கு உரித்துடைய அரசாங்க உத்தியோகத்தர்கள்.

(iii) ஆணைக்குழுத் தலைவர்கள், ஜனாதிபதி ஆலோசகர்கள், வெளிநாட்டு சேவையில் உள்ள வெளிநாட்டு தூதுக் குழுத் தலைவர்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட முறைச் சபைகள் மற்றும் அரச கம்பனிகளின் தலைவர்கள் மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்கள் பல்கலைக்கழக துணைவேந்தர்கள், இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர், பிரதி ஆளுநர், உதவி ஆளுநர், அரசாங்க வங்கித் தலைவர்கள், பொது முகாமையாளர்கள், மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்கள், சிரேஷ்ட நீதிமன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள்.

(2) மேலே 4 (அ) (1) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து ஆட்களும் இரண்டாம் தரத்திற்கு உரித்துடையவராவர்.

**(ஆ)** கல்வி அல்லது உத்தியோக வெளிநாட்டு பயணங்கள் சம்பந்தமாக வெளிநாட்டு அரசாங்கம் அல்லது மானியம் வழங்கும் நிறுவனத்தினால் இணைந்த கொடுப்பனவுகளின் ஒரு பகுதி (தங்குமிட வசதிகள் செய்து கொள்வதற்காக அல்லது உணவு பானங்களுக்காக மட்டும்.) செலுத்தும் சந்தர்ப்பங்களில் :

(i) வெளிநாட்டு அரசாங்கம் அல்லது மானியம் வழங்கும் நிறுவனத்தினால் தங்குமிடத்துக்கு மட்டும் வசதிகள் செய்யப்படும் சந்தர்ப்பங்களில் உணவு பானங்களுக்கு மேலே 4 (அ) வில் குறிப்பிடப்பட்டுள்ள இணைந்த கொடுப்பனவின் 35% ம் செலுத்த முடியும்.

(ii) வெளிநாட்டு அரசாங்கம் அல்லது மானியம் வழங்கும் நிறுவனத்தினால் உணவு பானங்களுக்காக மட்டும் வசதிகள் வழங்கும் சந்தர்ப்பங்களில் தங்குமிடம் பெற்றுக் கொள்வதற்காக மேலே 4 (அ) வில் குறிப்பிடப்பட்டுள்ள இணைந்த கொடுப்பனவின் 65% ம் செலுத்த முடியும்.

(இ) இலங்கையிலிருந்து வெளியான நேரத்தில் இருந்து மீண்டும் இலங்கைக்கு வரும் நேரம் வரை முழுமையான நாட்கணக்கின் பிரகாரம் கொடுப்பனவுகள் கணக்கிடப்படல் வேணடும். 12 மணித்தியாலங்களுக்குக் குறையாத எஞ்சிய காலம் இருப்பின் அதனை முழுமையான நாளொன்றாக கவனிக்கப்படல் வேண்டும்.

(ஈ) மேலே 03 (அ) வின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கல்வி, பயிற்சி பேச்சுவார்த்தை, கருத்தரங்கு போன்ற நிகழ்ச்சித் திட்டங்களுக்கு வெளிநாடு செல்லும் கால எல்லை 30 நாட்களை விடக் கூடும் சந்தர்ப்பமொன்றில் அல்லது / மற்றும் மேலே 03 (ஆ) வின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி கடமைக்காக வெளிநாடு செல்லும் கால எல்லை 15 நாட்களை விடக் கூடும் சந்தர்ப்பமொன்றில் இணைந்த கொடுப்பனவு செலுத்துவதற்காக திறைசேரிப் பிரதிச் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

(உ) வெளிநாட்டு அரசாங்கங்கள் அல்லது மானியம் வழங்கும் நிறுவனங்களினால், அனைத்து செலவினங்களும் காப்பளிக்கப்பட்டு வழங்கப்படும் முழு நேர புலமைப் பரிசில் நிகழ்ச்சித் திட்டத்திற்காக உத்தியோகத்தரொருவர் வெளிநாடு செல்லும் போது மற்றும்

ஜனாதிபதி நிதியம், பட்டப் பின் படிப்பு மருத்துவ நிறுவனம் (விசேட தரத்திற்கு மருத்துவர்கள் பயிற்சியளிப்பதற்காக) மற்றும் பாராளுமன்ற புலமைப்பரிசில் சபையினால் வழங்கப்படும் முழு நேரப் புலமைப் பரிசில் நிகழ்ச்சித் திட்டத்திற்காக வெளிநாடு செல்லும் போது இணைந்த கொடுப்பனவுகள் செலுத்தப்படக் கூடாது. எவ்வாறாயினும் இவ்வாறான புலமைப் பரிசிலொன்றுக்காக வெளிநாட்டு அரசாங்கங்கள் அல்லது மானியம் வழங்கும் நிறுவனங்களினால், அமையக் கொடுப்பனவுகள் செலுத்தப்படாத சநதர்ப்பங்களில் வெளிநாடு செல்லும் உத்தியோகத்தர் ஒருவருக்கு நாளொன்றுக்கு 40 ஐ.அ. டொலர் வீதம் உச்சமாக 15 நாட்களுக்கு அமையக் கொடுப்பனவு செலுத்த முடியும்.

(ஊ) வெளிநாடு செல்வதற்கு முன்னர் உரிய கொடுப்பனவுகள் பெற்றுக் கொள்ள முடியாமல் போனால் அந்தக் கொடுப்பனவுகள் வெளிநாடு சென்ற நாளில் நிலவிய செலாவணி விகிதத்தின் பிரகாரம் பின்னர் பெற்றுக் கொள்ள முடியும்.

**05. உபசரிப்புக் கொடுப்பனவுகள்.**

உத்தியோக சுற்றுலாவொன்றின் போது தூதுக் குழுவினருக்கு தலைமை வகிக்கும் அமைச்சரின் அல்லது அமைச்சின் செயலாளரின் வேண்டுகோளின் படி 750 ஐ.அ. டொலர் வரையிலான பணம் உபசரிப்புக் கொடுப்பனவாக செலுத்த முடியும்.

**06. மீள்நிரப்பக் கூடிய செலவினங்கள்.**

உத்தியோக வெளிநாட்டுப் பயணங்களுக்காக வெளியேறிச் செல்ல முன்னர் வெளிநாடு செல்லும் உத்தியோகத்தரினால் இந்நாட்டில் உறப்படும் கீழ்க் காணும் செலவினங்கள் அரசாங்கத்தினால் மீள்நிரப்பல் செய்ய முடியும்.

(அ) உத்தியோக வெளிநாட்டு பயணத்துக்கான பயணக் கடவுச் சீட்டுக் கட்டணம் மற்றும் வீசா கட்டணம்.

(i) வீசா கட்டணம் - உத்தியோக வெளிநாட்டுப் பயணத்திற்காக வெளிநாட்டு அரசாங்கம் அல்லது நிறுவனத்தினால் வீசா கட்டணம் செலுத்தாத சந்தர்ப்பமொன்றில் மட்டும் உத்தியோகத்தரினால் வீசா கட்டணத்தை மீள்நிரப்பல் செய்ய முடியும்.

(ii) பயணக் கடவுச் சீட்டுக் கட்டணம் - புதுப்பித்தல் உட்பட்டதாக உத்தியோக வெளிநாட்டுப் பயணம் சார்பாக உத்தியோகத்தரின் பயணக் கடவுச் சீட்டு பெற்றுக் கொள்வதற்காக உறப்படும் செலவினம் மீள்நிரப்பல் செய்ய முடியும். இங்கு ஒரு நாள் சேவை மூலம் பயணக் கடவுச்சீட்டு பெற்றும் கொள்ளும் சந்தர்ப்பமொன்றில் பயணக் கடவுச்சீட்டொன்று பெற்றுக் கொள்வதற்காக செலுத்தும் பொதுவான கட்டணம் மட்டும் மீள்நிரப்பல் செய்ய முடியும்.

(ஆ) காப்புறுதிக் கட்டணம்

உத்தியோகத்தரொருவர் மேலே 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோக நடவடிக்கையொன்றுக்காக வெளிநாடு செல்லும் போது வெளிநாட்டு அரசாங்கம் அல்லது மானியம் வழங்கும் நிறுவனத்தினால் வெளிநாடு செல்லும் கால எல்லைக்கு காப்புறுதி காப்பொன்று பெற்றுக் கொடுக்கப்படாத சந்தர்ப்பத்தில் வெளிநாடு செல்லும் உத்தியோகத்தருக்கு காப்புறுதி எல்லை ரூபா 2,400,000/- ஐ விஞ்சாத காப்புறுதி காப்பொன்று தமது நிறுவனத் தலைவரிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

(அ) வெளிநாடு செல்லும் போது மேலே 03, 04, 05 மற்றும் 06ம் பந்திகளின் கீழ் உள்ள ஏதேனும் கொடுப்பனவு அல்லது செலவினம் மீள்நிரப்புவதற்காக விண்ணப்பிக்கும் போது, அது சம்பந்தமான அங்கீகாரம் மற்றும் கொடுப்பனவு / செலவினம் கணக்கீடு செய்வதற்கு அடிப்படையாகும் விமானப் பயண விபரம் மற்றும் உரித்துடையதாகும் அனைத்து ஆவணங்களும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் அதன் பிரகாரம் கணக்கீடு செய்யப்படும் கொடுப்பனவுகள் செலுத்தப்படும் சந்தர்ப்பத்தில் அது செலவொன்றாக கணக்கீடு செய்தல் வேண்டும்.

(ஆ) யாரேனும் உத்தியோகத்தரொருவர் பெற்றுக் கொண்ட கொடுப்பனவுகளில் உரிமை பெறாத பணமாக இருப்பின் நாட்டுக்கு திரும்பி வந்த நாளன்று நிலவிய செலாவணி விகிதத்தின் பிரகாரம் உடனடியாக தீர்வு செய்தல் வேண்டும்.

08. இந்த விடயம் சம்பந்தமாக வெளியிடப்பட்டுள்ள 1996.04.20 ஆம் திகதிய இலக்கம் M.F6/1/1/96 கொண்ட சுற்றறிக்கை மற்றும் அதற்கு திருத்தமொன்றாக வெளியடப்பட்ட சுற்றறிக்கை மற்றும் 2010.10.11 ஆம் திகதிய இலக்கம் நி.தி.அ. 01/2010/01 கொண்ட நிதி திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கை இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

09. இந்தச் சுற்றறிக்கை பற்றிய தெளிவுறுத்தல்கள் தேவைப்படின் தொலைபேசி இலக்கம் 011- 2484535 ஊடாக இந்த அமைச்சின் பிரதான கணக்காளரிடம் விசாரிக்க முடியும்.

ஒப்பம் : ஆர்.எச்.எஸ். சமரதுங்க

நிதி அமைச்சின் செயலாளர் மற்றும் திறைசேரிச் செயலாளர்.

பிரதிகள் : 01. ஜனாதிபதியின் செயலாளர்

02. பிரதமரின் செயலாளர்

03. அமைச்சரவைச் செயலாளர்

04. கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

**அட்டவணை 01 – நாடுகள் தொகுதி**

| தொகுதி இலக்கம் | நாடுகளின் பெயர் | | | | |
|---|---|---|---|---|---|
| 1.ஐ.அ. டொலர் 200 | ஆப்கானிஸ்தான்<br>அல்பேனியா<br>அல்ஜீரியா<br>அஸர்பைஜான்<br>பஹமாஸ்<br>பெலருஸ்<br>பாபடோஸ்<br>பெலீஸ்<br>பூட்டான்<br>பொலிவியா<br>பொஸனியா<br>பொஸ்ட்வானா | புருன்டி<br>காம்பொஜியா<br>கனரி தீவுகள்<br>கேப்வர்ட்<br>குக்ஸ் தீவுகள்<br>டொமினிகா<br>எல்-சலவடோர்<br>எதியோப்பியா<br>இக்வடோரியல்<br>கெபோன்<br>கெம்பியா<br>ஜிபோல்டா | குவாமி<br>கிரிபட்<br>லாவோஸ் ம: சோ: குடியரசு<br>லெஸோதியா<br>லிம்டென்ஸ்டின்<br>மெஸிடோனியா<br>குடியரசு<br>மலாவி<br>மோல்டா<br>மோர்டினியா<br>மொங்கோலியா<br>மொன்டெக்ரோ<br>மியன்மார் | நெமிபியா<br>தாவுரு<br>நெதர்லாந்து<br>திவயின<br>நிகர்குவா<br>பலாவு<br>பெரகுவே<br>செமோவா<br>சமடுமா மற்றும் பிரின்ஸ்<br>சேர்பியா<br>சியராலியோன்<br>சொலமன் தீவுகள்<br>சோமாலியா | தன்ஸானியா<br>ஸ்வாஸிலாந்து<br>ரியுனீசியா<br>உகன்டா<br>உஸ்பெகிஸ்தான் |
| | | | | | |
| 2 ஐ.அ. டொலர் 260 | அன்டிகுவா-பர்பூடா<br>ஆர்மேனியா<br>ஆர்ஜன்டினா<br>பல்கேரியா<br>பங்களாதேஷ்<br>புரூனை<br>கெமரூன்<br>கோடட் இவோயா<br>கொஸ்டாரிகா | இக்வடோர்<br>பிஜீ<br>பிரான்ஸ் குயானா<br>குயானா<br>கிரனிடா<br>ஜோர்ஜியா<br>கோதமாமலா<br>கிரீன்லாந்து | கினிபிஸவ்<br>ஹவாய்<br>ஹய்டி<br>ஹொன்ட்யுராஸ்<br>அயர்லாந்து<br>ஈராக்<br>ஜெமைக்கா<br>கொரிய சோ: குடியுருசு | லைபீரியா<br>மெக்ஸிகோ<br>மைக்ரோனீசியா குடி:<br>மொனெகோ<br>மொசாம்பிக்<br>பெப்புவாநிவ்கினீ<br>சூரினாமய<br>யெமன் குடியரசு | யூகோஸ்லாவியா<br>டஹிட்டி<br>டொங்கா<br>வனுவாடு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 ஐ.அ. டொலர் 320 | பஹ்ரைன்<br>சிலீ<br>சைப்பிரஸ்<br>எகிப்து அரபி குடியரசு<br>எஸ்டியோனியா<br>கானா<br>ஹங்கேரி<br>இநதோனீசியா<br>ஈரான் மு: குடியரசு | குவைட்<br>லிதுவேனியா<br>மடகாஸ்கர்<br>மயுரிட்ஸயூஸ்<br>மலேசியா<br>மரலைதிவு<br>மொரொக்கோ<br>மெஜடோனியா குடி:<br>நேபாளம்<br>ஓமான் | பாகிஸ்தான்<br>பனாமா<br>பீரூ<br>பிலிப்பைன்ஸ்<br>போலந்து<br>கட்டார்<br>றூமேனியா<br>றுவான்டா<br>சவூதி அரேபியா<br>ஸ்லோவேனியா | சிரியா அரபி: குடியரசு<br>தென்ஆபிரிக்கா<br>புனித லூசியா<br>சூடான்<br>தாய்லாந்து<br>டோகோ<br>டிரினாட் டொபேகோ<br>உறுகுவே<br>வெனிசூலா<br>சைரே | வியட்நாம்<br>செம்பியா<br>சிம்பாப்வே<br>உக்ரேன் |
| 4. ஐ.அ. டொலர் 375 | பெல்ஜியம்<br>பெனித்<br>பர்கனாபோசோ<br>கெமரூஸ்.<br>மத்திய ஆபிரிக்க குடியரசு<br>கொலொம்பியா<br>கொங்கோ | குரோஷியா<br>கியுபா<br>செக் கூட்டரசாங்கம்<br>கொங்கோ சோ.குடியரசு<br>டஜிபூட்<br>கிரீஸ்<br>ஐய்ஸ்லாந்து | இந்தியா<br>ஐவரி கோஸ்ட்<br>ஜோர்தான<br>கசகிஸ்தான்<br>லெட்டீவியா<br>லெபனான்<br>லக்செம்பர்க் | மாலி<br>புதய கலிடோனியா<br>நைஜீரியா<br>போர்த்துக்கல்<br>சுலோவெக் குடியரசு<br>ஸ்பெயின்<br>தாய்வான் | துருக்கி<br>ஐ. அ. குடியரசு |
| 5. ஐ.அ. டொலர் 525 | அங்கோலா<br>அவுஸ்திரேலியா<br>ஒஸ்ட்ரியா<br>பிரேசில்<br>கனடா<br>சேட் | சீனா ( பீஜிங்)<br>டென்மார்க்<br>பிரான்ஸ்<br>ஜேர்மனி<br>பின்லாந்து<br>ஹொங்கொங் | இஸ்ரவேல்<br>இத்தாலி<br>ஜப்பான்<br>லிபியா<br>நெதர்லாந்து<br>நியூசிலாந்து | நைகர்<br>நோர்வே<br>ரஷ்யா<br>செனிகல்<br>சுவீடன்<br>ஸீ செல்ஸ் | சிங்கப்பூர்.<br>தென் கொரியா<br>சுவிட்சர்லாந்து<br>ஐக்கிய. இராச்சியம்<br>ஐக்கிய நாடுகள் |